දුරකථන අංක தொலைபேசி இல. Telephone Nos.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு

மம அංකය / எனது இல. / My No: ED/07/99/01/50

දිනය / திகதி / Date: 2013.04.19

பாடசாலைக் கட்டடங்கள் சுற்றறிக்கை இல. 01/2013

சகல தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கும்,

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், நன்கொடையாளர்கள் அல்லது பெற்றோர்களின் நிதி உதவியுடன் தேசிய பாடசாலைகளில் செய்யப்படும் கட்டுமானங்களுக்கான அனுமதிபெறல்

எனது ED/7/99/3/1/SH/50 இலக்கமும் 2012.09.19 ஆந் திகதியும்கொண்ட 02/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையை இரத்துச்செய்து இச்சுற்றறிக்கையை வெளியிடுகின்றேன்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால், பழைய மாணவர் சங்கத்தினால் அல்லது நன்கொடையாளர்களினால் அல்லது பெற்றோர்களினால் வழங்கப்பட்ட நிதி உதவிகளை ஈடுபடுத்தி தேசிய பாடசாலையொன்றில் யாதேனும் கட்டுமானமொன்றை மேற்கொள்ளக் கருதுவதாயின், அதற்காக கீழ்க்காணும் தகவல்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துடன் (இணைப்பு-1) பூர்த்திசெய்து சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொண்ட பின் மாத்திரம் கருத்திட்டத்தை அமுல்படுத்துமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

இவ்விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும்போது பின்வரும் விபரங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-

## 1. உத்தேச கருத்திட்டத்தின் திட்டங்களும் மதிப்பீடும்

உத்தேச கருத்திட்டத்தின் -

அ. கட்டடக்கலை வரைபடங்கள்,
ஆ. கட்டமைப்புசார் பொறியியல் வரைபடங்கள்,
இ. மதிப்பீடு மற்றும்
ஈ. கட்டுமானம் மேற்கொள்ளப்படவுள்ள உத்தேச இடத்தை பாடசாலை அமைப்புத் திட்டத்தில் உட்படுத்தி தயாரித்த திட்ட வரைபடம்

என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அதாவது, கட்டடக்கலைஞரின் திட்ட வரைபடங்கள் பட்டயம்பெற்ற ஒரு கட்டடக் கலைஞரினாலும், கட்டமைப்புசார் பொறியியல் திட்ட வரைபடங்களும் மதிப்பீடும் பட்டயம்பெற்ற பொறியியலாளர் ஒருவரினாலும் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தும் தொழில்வாண்மையினரின் பதவி இலச்சினை இடப்பட்டு ஒப்பமிடப்படலும் வேண்டும்.

## 2. கருத்திட்டத்திற்கு அவசியமான நிதி

உத்தேச பூரண கருத்திட்டத்திற்கு அவசியமான மொத்தக் கிரயம் பாடசாலை வசமுள்ளது என்பதை நிரூபிப்பதற்கு தகவல்களை முன்வைக்க வேண்டும். இதற்காக கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டும் வங்கி அறிக்கைகள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் முதலியவற்றின் அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. <u>கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் விதம்</u>

3.1 பாடசாலை மூலம் பெறுகைச் செயன்முறையை முன்னெடுப்பதாயின், அதற்காக பாடசாலைக்குள்ள ஆற்றலை உறுதிசெய்ய வேண்டும்.

3.2 அவ்வாறன்றேல், அமைச்சிய அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் பெறுகை விடயத்தை ஒப்படைத்து கருத்திட்டத்தை அமுல்படுத்தக் கருதப்படுகின்றது என்ற விடயம்.

3.3 வேலையை பாடசாலை மூலம் அமுல்படுத்துவதாயின் 3.3 இல் உள்ளவாறு கட்டுமானங்களின் மேற்பார்வையை பின்வருமாறு 02 குழுக்களைப் பெயரிட்டு அதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.3.1 தொழில்நுட்பக் குழுவில் (மேற்பார்வை பொறியியலாளர் அடங்கலாக) பட்டம்பெற்ற பொறியியலாளர் ஒருவர், பட்டம்பெற்ற கட்டடக்கலைஞர் ஒருவர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அல்லது கணிய அளவையாளர் ஒருவரேனும் குறைந்தபட்சம் இக்குழுவில் அடங்கியிருக்க வேண்டும்.

3.3.2 நடவடிக்கைக் குழு:
குறைந்தபட்ச அங்கத்தவர்களின் எண்ணிக்கை 03 ஆகும். இதில் பழைய மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களான பெற்றோர் அடங்கியிருக்க வேண்டும் என்பதுடன், அங்கீகாரம்பெற்ற தொழில்வாண்மையினர் இருவரேனும் இதில் அடங்கியிருக்க வேண்டும்.

4. <u>வேறு விடயங்கள்</u>

அரசாங்க நிதியீட்டமின்றி மேற்சொல்லப்பட்டவாறு நிதியீட்டம்செய்வதன்மூலம் பாடசாலையில் தற்போது பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள ஒரு கட்டடம் இருக்குமாயின், அதன் வேலைகளைப் பூர்த்திசெய்யாமல் புதியதொரு கட்டடத்தை அமைக்க அனுமதியளிக்க முடியாதென்பதால், அவ்வாறு அமைக்கப்பட்டு பகுதியளவில் வேலை பூர்த்திசெய்யப்பட்ட கட்டடங்கள் பாடசாலையில் தற்போது இல்லை என்பதையும் அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

சம்பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள்மூலம் அனுமதிபெறுவதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்/எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன
செயலாளர்
கல்வி அமைச்சு

<u>பிரதிகள்:</u>

| | |
|---|---|
| 1. பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) தென் மாகாணம்/மேல் மாகாணம்/சப்ரகமுவ மாகாணம்)<br>2. பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) – வடமேல் மாகாணம் | தயவுசெய்து மேற்சொன்ன, செயன்முறை தொடர்பாக மாவட்டப் பொறியியலாளர்/ பிரதேச பொறியியலாளரை அறிவுறுத்தி அவசிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக. |
| 3. பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளர் - வட மாகாணம்/கிழக்கு மாகாணம் | தயவுடன் தகவலுக்கும் அவசிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும். |
| 4. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் - | தயவுசெய்து உங்கள் மாகாணத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்துவதற்காக. |
| 5. பிரதிப் பணிப்பாளர் (பா.க.) – மத்திய மாகாணம்<br>6. பொறியியலாளர் (பா.க.) – வட மத்திய மாகாணம் ஊவா மாகாணம் | தயவுடன் தகவலுக்கும் அவசிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும். |

.................................................................................... பாடசாலையின்
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின், பழைய மாணவர் சங்கத்தின், நன்கொடையாளர்களின் அல்லது பெற்றோர்களின் நிதியுதவியுடன் கட்டுவதற்கு உத்தேசிக்கப்படும் .................................................. க்கு அனுமதி பெறல்

இவ்வறிக்கையின் பகுதி I அதிபரினாலும், பகுதி II வலயக் கல்விப் பணிப்பாளரினாலும், பகுதி III ஏற்புடைத்தானவாறு பிரதேசத்தின் பாடசாலைக் கட்டடங்கள் பொறியியலாளர் அல்லது மாவட்டப் பொறியியலாளர் (பாடசாலைக் கட்டடங்கள்) அல்லது பிரதேச பொறியியலாளரினாலும், பகுதி IV மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் பூர்த்திசெய்யப்பட்டு கல்வி அமைச்சின் பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளர் ஊடாக கல்விச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

## பகுதி I : அதிபரின் அறிக்கை

1. பாடசாலையும் அதன் அமைவிடமும்:

1.1 பாடசாலையின் பெயர்: ..........................................................................................

1.2 பிரதேச செயலாளர் பிரிவு: ..........................................................................................

1.3 இவ்வாண்டிலுள்ள மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கை: ..........................................

2. உத்தேச கட்டுமானங்கள் பற்றிய தகவல்கள்:

2.1 ஒரு கட்டடமாயின், அதன்;
நீளம்: ..........................................................................
அகலம்: ..........................................................................
மாடிகளின் எண்ணிக்கை: ......................................................

2.2 அக்கட்டடத்தின் வகை: ..........................................................................................
(வகுப்பறைக் கட்டடம், ஆய்வுகூடம் என்றவாறு)

2.3 வேறு கட்டுமானமாயின், அக்கட்டுமானம் பற்றி சுருக்கமாக விபரிக்கவும்.
..........................................................................................................................
..........................................................................................................................

2.4 கீழ்க்காணும் திட்ட மதிப்பீட்டின் 02 பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2.4.1 கட்டடக்கலை நிபுணர் திட்டங்கள் (பட்டயம்பெற்ற கட்டடக்கலைஞர் ஒருவரால் அனுமதிக்கப்பட்டு உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.)

2.4.2 கட்டமைப்புசார் பொறியியலாளர் திட்டங்கள் (பட்டயம்பெற்ற பொறியியலாளர் ஒருவரால் அனுமதிக்கப்பட்டு உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.)

2.4.3 பொறியியலாளர் மதிப்பீடுகள் (பட்டயம்பெற்ற பொறியியலாளர் ஒருவரால் அனுமதிக்கப்பட்டு உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.)

2.4.4 கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படவுள்ள இடம் அல்லது அமைப்புத்திட்டத்தில் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட திட்டம்)

2.5 உத்தேச கட்டுமானத்திற்குச் செலவாகும் தொகை நிதியீட்டம் செய்யப்படும் விதம்

2.5.1 பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ரூ. ..............................................

2.5.2 பழைய மாணவர் சங்கம் ரூ. ..............................................

2.5.3 நன்கொடையாளர்கள் ரூ. ..............................................

2.5.4 பெற்றோரின் நிதியுதவி ரூ. ..............................................

2.5.5 வேறு ரூ. ..............................................

மொத்தத் தொகை: ரூ. ..............................................

மேலே குறிப்பிடப்பட்ட தொகை ஏற்கனவே பாடசாலை வசமுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான வங்கி அறிக்கைகள், நிலையான வைப்புச்சான்றிதழ்கள் முதலியவற்றின் சான்றுப்படுத்திய பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இத்தொகை, இக்கருத்திட்டம் தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்பதையும் உறுதிப்படத் தெரிவிக்கின்றேன்.

3. கருத்திட்டம் அமுல்படுத்தப்படும் விதம்

3.1 பாடசாலை மூலமே பெறுகைச் செயன்முறை நிறைவேற்றப்படுகின்றதாயின், பின்வரும் கருமங்களை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் உள்ளது என்பதை அதிபர் அத்தாட்சிப்படுத்த வேண்டும்

3.1.1 கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல்

3.1.2 விலை கோரல்

3.1.3 தொழில்நுட்பக் குழுவினால் முன்வைக்கப்படும் கேள்விகளை மதிப்பீடு செய்தல்

3.1.4 பெறுகைக் குழுக்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

3.1.5 ஒப்பந்தங்களை ஒப்படைத்தல்

3.1.6 வேலை மேற்பார்வையும் ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளலும்

3.2 கட்டுமான மேற்பார்வைக்கு பின்வருமாறு இரண்டு குழுக்களைப் பெயர்குறித்து இத்துடன் அனுமதிக்காக சமர்ப்பிக்கின்றேன்.

3.2.1 தொழில்நுட்பக் குழு (மேற்பார்வை பொறியியலாளர் உட்பட)
இக்குழுவில் பட்டயம்பெற்ற பொறியியலாளர் ஒருவர், பட்டயம்பெற்ற கட்டடக்கலை நிபுணர் ஒருவர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் அல்லது கணிய அளவையாளர் ஒருவர் குறைந்தபட்சம் அடங்கியிருக்க வேண்டும்.

3.2.2 நடவடிக்கைக் குழு
ஆகக்குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5 ஆகும். பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெற்றோரும் இதில் அடங்கியிருக்க வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மையினர் இருவரேனும் இதில் அடங்கியிருக்க வேண்டும்.

3.2.3 மேலும், நீச்சல் தடாகம் போன்ற பாரிய கருத்திட்டங்களுக்கு குறைந்தபட்சம் 09 அங்கத்தவர்கள் இருக்க வேண்டும் என்பதுடன், மேலே 3.2.2 அமைப்பையும் இதற்காகப் பின்பற்ற வேண்டும்.

3.3 கருத்திட்டத்தை கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் பெறுகை நடவடிக்கையை மேற்கொண்டு நிறைவேற்ற எதிர்பார்க்கின்றீர்களா;

3.3.1 அவ்வாறாயின், கருத்திட்டத்தின் மொத்தக் கிரயத்தை மாகாணக் கல்வி அலுவலகத்தில் வைப்பிலிட வேண்டும்.

3.3.2 இங்கு, கட்டுமானப் பணி மேற்பார்வைசெய்யப்படும் பிரதேசப் பொறியியலாளர்/ மாவட்டப் பொறியியலாளருக்கு உதவுவதற்கு மேலே 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு குழுக்களையும் பெயர்குறித்து அனுமதிக்காக இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

4. தற்போது பாடசாலையின் வேலைகள் பூர்த்திசெய்யப்படாத கட்டடங்கள் அல்லது வேறு கட்டுமானங்கள் (பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட) உள்ளனவா என்பதும், அவற்றைப் பூர்த்தி செய்யாமைக்கான காரணமும்:

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

உத்தேச கட்டுமானம் இப்பாடசாலைக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதுடன், மேலே 1 முதல் 4 வரையுள்ள சகல தகவல்களும் சரியான முறையில் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
திகதி

..............................
அதிபரின் ஒப்பம்

*(பதவி இலச்சினை)*

## பகுதி II : வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு

அதிபரினால் மேலே முன்மொழியப்பட்டுள்ள கட்டுமானம், இப்பாடசாலைக்கு அத்தியாவசியமானது என்பதையும் அதிபரினால் முன்மொழியப்பட்டுள்ளவாறு இக்கட்டுமானத்தை பூர்த்திசெய்வது பொருத்தமானது என்பதையும் சிபார்சு செய்கின்றேன் / சிபார்சு செய்யவில்லை.

சிபார்சு செய்யவில்லை எனின் அதற்கான காரணங்கள் :

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................

திகதி

..............................................................

வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பம்

(பதவி இலச்சினை)

## பகுதி III: பிரதேசத்தின் பாடசாலைக் கட்டடப் பொறியியலாளர் அல்லது மாவட்டப் பொறியியலாளர் அல்லது பிரதேச பொறியியலாளரின் சிபார்சு

அதிபரும் வலயக் கல்விப் பணிப்பாளரும் சமர்ப்பித்துள்ள மேற்போந்த தகவல்களை நான் ஆராய்ந்தேன். இந்த உத்தேச கட்டுமானத்துக்கு அவசியமான பெறுகை நடவடிக்கைகள்/ கண்காணிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்ற இத்தால் உடன்படுகின்றேன்.

அவ்வாறு உடன்பட முடியாதெனில், அதற்கான காரணங்கள்:-

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................

திகதி

..............................................................

பாடசாலைக் கட்டடங்கள் பொறியியலாளர்/
மாவட்டப் பொறியியலாளர்/
பிரதேச பொறியியலாளர்

(பதவி இலச்சினை)

## பகுதி IV : மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சு

பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளர் ஊடாக,

செயலாளர்,
கல்வி அமைச்சு

உத்தேச புதிய கட்டுமானங்களை சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை. மேலே 3.3 இலுள்ள கோரிக்கைப்படி இக்கருத்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் உடன்படுகின்றேன்.

சிபார்சு செய்யவில்லை எனில், அதற்கான காரணங்கள் :-

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................

திகதி

..............................................................

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

(பதவி இலச்சினை)

பகுதி V : பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளரின் சிபார்சு

செயலாளர்
கல்வி அமைச்சு

கருத்திட்டம் சார்ந்த சகல தகவல்களும் சரியானவையாக முன்வைக்கப்பட்டுள்ளன / முன்வைக்கப்படவில்லை. கருத்திட்டத்தை சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

சிபார்சு செய்யவில்லை எனில், அதற்கான காரணங்கள்-

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

..............................
திகதி

..................................................................
பாடசாலை கட்டடங்கள் பணிப்பாளர்
(பதவி இலச்சினை)

பகுதி VI : கல்விச் செயலாளரின் அனுமதி

பாடசாலைக் கட்டடங்கள் பணிப்பாளர் ஊடாக,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
.............................. மாகாணம்,

உத்தேச கருத்திட்டத்துக்கு அனுமதி அளிக்கின்றேன் / அனுமதி அளிக்கவில்லை.

..............................
திகதி

..................................................................
செயலாளர்
கல்வி அமைச்சு

(பதவி இலச்சினை)